MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on   Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **21.03.2025ஆம் தேதி  வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு<br>நடைபெறவுள்ள சாதாரணக்கூட்டம்<br>முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்** | |
| 674 | **மன்றப்பொருள்  எண்.1**<br><br>அரசு ஆணை (நிலை) எண்.97/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (ந.நி.4) நாள்.12.07.2017இன்படி ஒவ்வொரு நிதியாண்டிற்கும் புதிதாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு 5% சாலை சீரமைப்பு கட்டணம், குடிநீர் குழாய்இணைப்புக்கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணத்தை உயர்த்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டிற்கு முந்தைய ஆண்டிலிருந்து 5% கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும். | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | 0-30 மீ வரை கருங்கல் சல்லி ரோடு | | 0-30 மீ வரை தார் ரோடு | | 0-30 மீ வரை சிமெண்ட் ரோடு | |
|---|---|---|---|---|---|---|
| | 2024-25 | 2025-26 | 2024-25 | 2025-26 | 2024-25 | 2025-26 |
| சாலை சீரமைப்பு கட்டணம் | 2439 | 2561 | 4212 | 4423 | 4726 | 4962 |
| புதிய குடிநீர் இணைப்புக் கட்டணம் | 5538 | 5815 | 5997 | 6297 | 6180 | 6489 |
| மேற் பார்வை கட்டணம் | 2205 | 2315 | 2205 | 2315 | 2205 | 2315 |

அலுவலகக்குறிப்பு

இந்நகராட்சிக்கு  அரசின் விதிகளின்படி வருவாய் அதிகரிக்கும் பொருட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 675 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.2<br><br>இந்நகராட்சி வார்டு 3, நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின்படி, வார்டு எண். 3 கம்பர் தெருவில் உள்ள இந்நகராட்சி சமுதாயக்கூடத்தில் சமையலறை வசதி கழிப்பறை வசதி மற்றும் உணவுக்கூடம் உள்ளிட்ட கூடுதல் பணிகள் செய்வதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.20.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 676 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.3<br><br>மேலூர் நகராட்சியில், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மேலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள் நோயாளிகளுடன் வரும் பாதுகாவலர்கள் தங்குவதற்கான சிறப்பு தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி தங்குமிடத்தை27.11.2023 முதல் M/s Sweet Trust மதுரை மூலம் நிர்வாக இயக்குநர் திரு.கோவிந்தராஜ் என்பவரால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் கடந்த 09.07.2024 அன்று நிர்வாகஇயக்குநர் இயற்கை எய்தினார். அதனால் மேற்படி தங்குமிடத்தை M/s Surabhi Trust என்ற நிறுவனம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளது.<br>இந்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரைஅவர்களால் பரிந்துரை கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் M/s Surabhi Trust நிறுவனம் 3 வருட காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்பத்திரம் வழங்கியுள்ளது. எனவே அரசு விதிக்கும் நிபந்தனைகளின்படி தங்குமிடத்தை பராமரிப்பு மேற்கொள்ள மேலாளர்1 , கவனிப்பாளர்–2, பாதுகாவலர்–1, சுத்தப்படுத்துநர் 1 எண்ணிக்கை ஆகிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பக்கெட் , ஜக், பெட்சீட் ,பாய் மற்றும் கால்மிதியடி போன்ற பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தொகையினை NULM நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 677 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.4<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, புதுபர்மாகாலனி கதவு எண்.1சி உள்ள குடியிருப்பினை திரு.ரா.ராஜேந்திரன் என்பவர் பெயரிலிருந்துதிரு.ரா.ஜோதிகிருஷ்ணன் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்யக்கோரி திரு.ரா.ஜோதிகிருஷ்ணன் என்பவர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD).No.10140/2024 மற்றும் Cont(MD).No.154/2025 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.A.பாண்டியராஜன் வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் ஆஜரானதற்கு வழக்கு கட்டணம் ரூ.23000/–(ரூபாய் இருபத்து மூன்றாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.680/2024/அ1 | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 678 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.5<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க சிரம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வருகின்றது. அதனால் குடிநீர் பகிர்மானக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்து குடிநீர் விநியோகிக்க 2025-2026ம் ஆண்டிற்கான குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 679 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.6<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் இல்லாததனால் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க இயலவில்லை. அதனால் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தில் உள்ள பிரதான குழாயிலிருந்து புதிய குடிநீர் குழாய் அமைத்து மில்கேட், சின்னரசன்பட்டி, திருவள்ளுவர் நகர், மலம்பட்டி, தெற்குப்பட்டி மற்றும் சொக்கம்பட்டி ஆகிய வார்டு எண்.10, 20, 21, 24, 25 மற்றும் 26 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளுடன் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து அதனுடன் இணைக்க தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 680 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.7<br><br>இந்நகராட்சி 2வது நகர்மன்ற உறுப்பினர் மற்றும் 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, இந்நகராட்சி வார்டு எண். 2, வெங்கடேஷ்வரா நகர் பூங்கா மற்றும் வார்டு 12 விஷ்ணு நகர் பூங்காக்களில் பராமரிப்பு பணிகள் செய்வதற்கான மதிப்பீடுத்தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 681 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.8<br><br>இந்நகராட்சி ஈப்பு வாகன எண்.TN59CV9487 வாகனத்தை பழுதுநீக்கம் பணி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Automative Manufactures PVT, Ltd, Kappalur, Madurai நிறுவனத்தின் பழுதுநீக்கம் பணி மேற்கொண்டமைக்கான செலவினத்தொகை ரூ.47643-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 682 | **மன்றப்பொருள் எண்**.9<br><br>மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2024–2025ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 14.02.2025 அன்று **ஒப்பந்த**ப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள **ஒப்பந்த**ப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் **ஒப்புதலுக்கும்** வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. |

| **வ. எண்.** | **வேலையின் விபரம்** | **மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்** | **மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்** | **மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்** |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி**–2024–25 | | | |
| 1 | வார்டு எண்.**14**க்குட்பட்ட மேலத்தெருவில் சேதமடைந்த இரண்டு சிறுபாலங்களை உடைத்து அகற்றிவிட்டு புதிதாக இரண்டு சிறுபாலங்கள் அமைத்திடவும் மற்றும் அதே வார்டுகளுக்குட்பட்ட அய்யப்பன்கோவில் அருகில் உள்ள மழைநீர் வாறுகாலில் சிமிண்ட் கான்கீரிட் சிலாப்புகள் கொண்டு மூடி பணி | 4.00 | **திருமதி.சந்திர பிரியா** – 0.01 % **குறைவு** | **திரு.** மழுவேந்தி 1.01 % **அதிகம்** |
| 2 | வார்டு எண்.**12**க்குட்பட்ட எஸ்.எம்.நகரில் உள்ள நியாயவிலைக்கடை **(Ration shop)** முன்பாக தாழ்வான பகுதியினை **wmm** கற்கள் கொண்டு நிரப்பு பேவர் பிளாக் தளம் அமைத்தடிவும் மற்றும் நியாயவிலைக்கடை முன்பாக **GI Sheet shed** அமை**க்கும் பணி** | 4.50 | **திருமதி. சத்தியவதி** – 0.04 % **குறைவு** | **திரு. ஆர். செல்வ முருகன்** 1.12 % **அதிகம்** |
| 3 | வார்டு எண்.**27**க்குட்பட்ட கலைஞர் நகர் கிழக்கு தெருவில் உள்ள சேதமடைந்த மழைநீர்கால்வாய் மற்றும் சிறுபாலத்தை சீரமைத்து புதிதாக மட்டும் பணி | 1.50 | **திரு.செந்தில் குமார்** – 0.03 % **குறைவு** | **திரு.** அஜ்மல்கான் 1.09 % **அதிகம்** |
| 4 | வார்டு எண்.**4**க்குட்பட்ட வெள்ளநாதன்பட்டி பிரதான சாலையில் சிறுபாலம் அமைக்கும் பணி | 5.00 | **திருமதி. சந்திர பிரியா** –0.02% **குறைவு** | **திரு.** மழுவேந்தி 1.29 % **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| **5** | வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் மழை காலங்களில் எதிர்பாராத விதமாக விழும் மரங்களை அப்புறப்படுத்தவும், மழைநீர் தேங்காமல் மணல் வாறுகால் ஜே.சி.பி.இயந்திரம் மூலம் அமைத்து மழைநீரினை அப்புறப்படுத்தவும் சாலை மற்றும் சாலை ஓரங்களில் ஏற்படும் பள்ளங்களை **1:4:8, 1:2:4** கான்கிரீட் கொண்டு தற்காலிக சீரமைப்பு பணி செய்திடவும், **wmm** கொண்டு சாலை ஓரங்களை சரிசெய்திடவும், மேலும் இதர பொறியியல் பிரிவு பணிகள் டிசம்பர் **2024** முதல் அக்டோபர் **2025** ஓர் ஆண்டிற்கு **பணி செய்தல்** | 5.00 | **திரு. பதுருனிஷா** – 0.04 % **குறைவு** | **திரு. ஆர்**. **செல்வமுருகன்** 1.25 % **அதிகம்** |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

வரிசை எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.சந்திரபிரியா** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருமதி.சத்தியவதி** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.3ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருசெந்தில்குமார்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.4ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருமதி.சந்திரபிரியா**ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.5ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு. பதுருனிஷா** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 683 | **மன்றப்பொருள் எண்**.10<br><br>மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2024–2025ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 12.02.2025 அன்று **ஒப்பந்த**ப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள **ஒப்பந்த**ப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் **ஒப்புதலுக்கும்** வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி**–2024–25 | | | |
| 1 | வார்டு எண்.23க்குட்பட்ட தினசரி சந்தை முனியாண்டிகோவில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி | 10.00 | **திரு.செல்வ முருகன்** –0.03 % **குறைவு** | **திரு.** மழுவேந்தி 1.19 % **அதிகம்** |
| 2 | மேலூர் நகராட்சி வார்டு எண்.24 கருத்தபுளியம்பட்டி நடுத்தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 1.50 | **திரு.** மழுவேந்தி – 0.02 % **குறைவு** | **திரு. ஆர். செல்வ முருகன்** 1.14 % **அதிகம்** |
| 3 | வார்டு எண்.18க்குட்பட்ட செக்கடி சேகர் உணவகம் கிழக்கு மற்றும் பின்புறம் புதிதாக வாறுகால் அமைத்து சிமிண்ட் கான்கீரிட் சிலாப்புகள் அமைத்து சிமிண்ட் தளம் அமைக்கும் பணி | 4.90 | **திரு.செல்வ முருகன்** – 0.04 % **குறைவு** | **திரு.** மழுவேந்தி 1.09 % **அதிகம்** |
| 4 | மேலூர் நகராட்சி வார்டு எண்.13க்குட்பட்ட கோமதியாபுரம் நடுத்தெருவில் சேதமடைந்த பேவர்பிளாக் சாலையினை மராமத்து செய்யும் பணி. | 2.00 | **திருமதி. சத்தியவதி** –0.03 % **குறைவு** | **திரு.** 1.05 % **அதிகம்** |
| 5 | வார்டு எண்.6, வ.உ.சி நகர் முதல் தெருவில் ஆழ்துளைகுழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து பணி | 3.00 | **திரு.** மழுவேந்தி – 0.05 % **குறைவு** | **திரு. ஆர். செல்வமுருகன்** 1.15 % **அதிகம்** |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

**வரிசை எண்**.1**ல் கண்ட** பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.செல்வ முருகன்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | **வரிசை எண்**.2**ல் கண்ட** பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.** மழுவேந்தி ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**வரிசை எண்**.3**ல் கண்ட** பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.செல்வமுருகன்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**வரிசை எண்**.4**ல் கண்ட** பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருமதி.சத்தியவதி** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**வரிசை எண்**.5**ல் கண்ட** பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.** மழுவேந்தி ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 684 | **மன்றப்பொருள் எண்**.11 | அனுமதிக்கப்பட்டது. |

மேலூர் நகராட்சியில் கீழ்க்கண்ட திட்டப்பணிகள் மேற்கொள்ள 12.02.2025 அன்று **ஒப்பந்த**ப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள **ஒப்பந்த**ப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் **ஒப்புதலுக்கும்** வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **வேலையின் விபரம்** | **மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில்** | **மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்** | **மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்** |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | NHM 2022-23 | | | |
| **1.** | **இந்நகராட்சிக்குட்பட்ட** வார்டு எண்.5 ல் சந்தைபேட்டை **நகர்நல மையத்தில் பழுதுப்பணிகள் பார்க்கும் பணி.** | **0.50** | **திரு.அஜ்மல்கான்** 0.01 % **குறைவு** | **திரு.** மழுவேந்தி 1.01 % **அதிகம்** |
| | ICDS FUND | | | |
| **2.** | மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, சொக்கம்பட்டி மற்றும் வார்டு எண்.16ல் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதி செய்யும் பணி. | **0.72** | **திரு.லத்திப்** 0.04 % **குறைவு** | **திரு. எஸ்.ரவி** 1.12 % **அதிகம்** |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

வரிசை எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.அஜ்மல்கான்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு.லத்திப்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>685</td>
<td>

<u>**மன்றப்பொருள் எண்**.12</u>

மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2024–2025ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 12.02.2025 அன்று **ஒப்பந்த**ப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள **ஒப்பந்த**ப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் **ஒப்புதலுக்கும்** வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்</th><th>மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th><th>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td></td><td>பொது நிதி</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான மலம்பட்டி உரக்கிடங்கில் குப்பை வண்டிகள் தங்கு தடையின்றி செல்வதற்கு ஏதுவாக ஏற்கனவே குவிந்துள்ள குப்பைகளை பொக்லைன் இயந்திரம் மூலம் சமப்படுத்தும் பணி</td><td>5.00</td><td>திருமதி. பதுருனிஷா<br>–0.03 % குறைவு</td><td>திரு. சத்தியவதி<br>1.05 % அதிகம்</td></tr>
</table>

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

வரிசை எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருமதி. பதுருனிஷா** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 686 | <u>**மன்றப்பொருள் எண்**.13</u><br><br>மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2024–2025ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 07.02.2025 அன்று **ஒப்பந்த**ப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள **ஒப்பந்த**ப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் **ஒப்புதலுக்கும்** வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. |

| **வ. எண்.** | **வேலையின் விபரம்** | **மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில்** | **மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்** | **மதிப்பீடு ே விட அதி ஒப்பந்தப்பு வழங்கிய ஒப்பந்ததா மற்றும் சத** |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **பொதுநிதி–2024–25** | | | |
| 1 | வார்டு எண்.27 கிழக்கு 3வது தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 1.25 | **திரு. செந்தில் குமார்** –0.03 % **குறைவு** | **திரு.** எம்.எ 1.05 % **அதி** |
| 2. | வார்டு எண்.26 முத்துமாரியம்மன் கோவில் தெரு மேற்கு 3வது தெரு முத்துமாரியம்மன்கோவில் தெரு மேற்கு 2வது தெரு மற்றும் முத்துமாரியம்மன் கோவில் தெரு 4வது தெரு ஆகிய பகுதிகளில் 3 சிறுபாலங்கள் அமைக்கும் பணி | 5.00 | **திரு. செந்தில் குமார்** –0.05 % **குறைவு** | **திரு.** எம்.எ 1.01 % **அதி** |
| 3. | மேலூர் நகராட்சி வார்டு எண்.**27**க்குட்பட்ட பகுதியில் நியாய விலைக்கடை அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் **40** மீட்டர் நீளத்தில் **20** மீட்டர் அகலத்தில் சுற்றிலும் கம்பி வேலி அமைத்து **(fencing)** அதில் பேவர் பிளாக் மற்றும் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் உடற்பயிற்சி உபகரணங்கள் வசதிகள் ஏற்படுத்தும் பணி | 4.00 | **திரு.செந்தில் குமார்** – 0.02 % **குறைவு** | **திரு.** எம்.எ 1.13 % **அதி** |
| 4. | மேலூர் நகராட்சிக்குட்பட்ட 24 எண்ணிக்கையிலான மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் திறப்பு வால்வுகளை **(Pumbing and Distribution)** பணிகள் மேற்கொள்ள | 5.00 | **திரு.அஜ்மல்கான்** – 0.04 % **குறைவு** | **திரு. ஆர்.** **செல்வமு** 1.35 % **அதி** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொறியியல்பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் தற்காலிக பணியாளர்கள் கொண்டு பராமரிப்பு பணி | | | | |
| 5. | மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சிறுமின்விசை மோட்டார்கள் மற்றும் உள்ளூர் நீர்ஆதாரங்களில் உள்ள மின் மோட்டார்கள் பழுதுபார்க்கும் பணி | 5.00 | **திரு.அஜ்மல்கான்** – 0.03 % **குறைவு** | **திரு. ஆர். செல்வமுருகன்** 1.25 % **அதிகம்** | |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

வரிசை எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு. செந்தில்குமார்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு. செந்தில் குமார்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.05 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.3ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திருசெந்தில்குமார்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட – 0.02 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.4ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு. அஜ்மல்கான்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

வரிசை எண்.5ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட **திரு. அஜ்மல்கான்** ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 687 | **மன்றப்பொருள் எண்**.14<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, 20 பிஸ்மில்லா நகர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மேலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகே 6 மீட்டர் உயரம் கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பகுதியானது மேடான பகுதியாக இருப்பதால் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. மேற்கண்ட பகுதியில் 300 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அப்பகுதிவாழ் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர்விநியோகம் செய்யும் வகையில் புதிதாக நீர்தேக்க தொட்டி அமைத்து தரக்கோரி நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே பிஸ்மில்லா நகர் பகுதியில் 12 மீட்டர் உயரமுள்ள 50000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. 15வது மத்திய குழு மானிய நிதி / குடிநீர் நிதியில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பகுதியில் புதிதாக குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தால் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க முடியும். எனவே நீர்தேக்க தொட்டி அமைக்க அனுமதி வழங்கலாம். | |
| 688 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.15<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, அருகில் அழகர்கோவில் ரோட்டில் உள்ள சூரக்குண்டு கிராமத்திற்கு உட்பட்ட எம்.ஜி.ஆர்.நகர் (சர்வே எண்.149) மற்றும் மரியம் பள்ளிவாசல் அருகில் (சர்வே எண்.147, 148) பகுதிகளில் உள்ள 50 குடும்பங்களின் குடும்ப அட்டை , வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்டவைகள் மேலூர் நகராட்சி 1வது வார்டில் உள்ளது. ஆனால் அவர்கள் குடியிருக்கும் இடமானது சூரக்குண்டு கிராம எல்லையில் அமைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குடியிருப்பிற்கான வீட்டு வரியினை மேலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சூரக்குண்டு ஊராட்சியில் செலுத்தி வருகின்றனர். இப்பகுதியான இந்நகராட்சியின் 1வது வார்டு பகுதியில் மத்தியில் அமைந்துள்ளதால் மேலும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அடிப்படை வசதிகளை செய்து தர இந்நகராட்சிக்கு மனு அளித்து வருகின்றனர்.<br>எனவே மேற்கண்ட இந்நகராட்சியின் 1வது வார்டு பகுதியின் மத்தியின் அமைந்துள்ள சூரக்குண்டு கிராம சர்வே எண்.147, 148 மற்றும் 149 ஆகிய மூன்று சர்வே எண்களில் வசிக்கும் சுமார் 50 குடும்பங்களின் பகுதியினை மட்டும் இந்நகராட்சியில் இணைப்பதற்கான கருத்துருவினை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட சூரக்குண்டு சர்வே எண்.147, 148 மற்றும் 149 ஆகிய மூன்று சர்வே எண்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதியினை மேம்படுத்த இப்பகுதியினை மேலூர் நகராட்சியின் பகுதியோடு இணைப்பதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம். | அ) , ஆ) அனுமதிக்கப்பட்டது. |
| 689 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.16<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.61/2017/மா.தி.3 நாள்.20.02.2024ன்படி, கோடை காலத்தில் வெப்ப அலையின் காரணமாக பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கும் அவசியம் குறித்தும் பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டபடியால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு (57)7 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் எதிரில் மற்றும் தாலுகா ஆபிஸ், புறநகர் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பேருந்துநிலையம் பகுதி, தற்காலிக பேருந்து நிலையம், தற்காலிக தினசரி மார்க்கெட் பகுதி, நகராட்சி அலுவலகம், புதிய தினசரி மார்க்கெட் பகுதி, வாரச்சந்தை ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு இரும்பு மேடை (GI Stand) அமைத்து சின்டெக்ஸ் தொட்டி வைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர ஏற்படும் கால தாமதத்தினை கருத்தில் கொண்டு பணியின் அவசர அவசியம் கருதி 05.03.2024 அன்று குறைவான விலைப்புள்ளி வழங்கி பிரிவு 59(1)ன் கீழ் பணி மேற்கொண்ட திரு.எம்.அஜ்மல்கான் என்ற ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ரூ.490471/- வழங்குவதற்கு நகர்மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 690 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.17<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள பகுதியில் சேகரமாகும் குப்பைகளை தரம்பிரித்து சேகரம் செய்து நுண்உரக்கூடம் மற்றும் வளமீட்பு மையங்களில் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகரின் வணிகப்பகுதிகளில் பொதுமக்கள் குப்பைகளை வீசிச் செல்வதால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் வகையில் நகரில் 10 எண்ணிக்கையிலான இடங்களில் தடுப்புச்சுவர் (KERBWALL) அமைத்து GI இரும்புகுழாய் மற்றும் (FENCING) கம்பிவேலி அமைத்து குப்பைகளை தரம்பிரிக்கும் கூடத்திற்கு திட்டமதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 691 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.18<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி வார்டு.26-ல் உள்ள முனியாண்டி கோவிலுக்கு 25,26,27-வார்டு பகுதிவாழ் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்வசதி செய்து தருவதற்கு போர்வால் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 692 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.19<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05 நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி சந்தைப்பேட்டை 2வது தெரு மற்றும் 3வது தெரு கூத்தப்பன்பட்டி ரோடு, நயினார் ஊரணி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு திட்டமதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயார் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 693 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.20<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மற்றும் 11–ன் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி சொக்கம்பட்டி அங்கன்வாடி பின்புறம் உள்ள பிரசித்து பெற்ற ஸ்ரீ கொப்புடைய நாயகி அம்மன் கோவில் அருகே உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் தரை மிகவும் சேதமடைந்து இருப்பதால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமமாக இருப்பதால் அதனை சீரமைத்திட பேவர் பிளாக் தளமாக தயாரிக்கப்பட்டவை மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 694 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.21<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி சிவன்கோவில் தெரு மற்றும் காத்தாப்பிள்ளை தெருவில் உள்ள சிமெண்ட் கல்தளம் சாலையானது குடிநீர்குழாய் இணைப்புகள் வழங்குவதற்காக குழாய் பதிக்கும் மெற்கொள்ளப்பட்டதால் பேவர் பிளாக் சாலையானது மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் செல்வதற்கு சிரமப்படுகின்றனர்.மற்றும் காத்தாப்பிள்ளை தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு சேர்த்து திட்டமதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 695 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.22<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 பல்லவராயன் பட்டி பகுதியில் உள்ள குடிநீர் நீரேற்று நிலையத்தில் புதிதாக நீர்தேக்க தொட்டி அமைத்துதரக்கோரி அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே மேற்படி பகுதியில் 50000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பகுதியில் புதிதாக குடிநீர்தேக்கதொட்டி அமைத்தால் சீரான முறையில் குடிநீர் விநியோகிக்க முடியும்.எனவே நீர்தேக்க தொட்டி அமைக்க அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 696 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.23<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24, கருத்தபுளியன்பட்டி பிரதான சாலை பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இல்லாததால் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே மேற்படி வார்டு எண்.24, கருத்தபுளியன்பட்டி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 697 | **<u>மன்றப்பொருள் எண்</u>**<u>.24</u><br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி நகராட்சி பேருந்து நிலையம் கிழக்கு பகுதியில் பேருந்து நிலையத்திற்கு செல்லும் பாதையினை பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் பேருந்து நிலையம் கட்டுப் பணி நடைபெறும்பொழுது அப்பாதை சேதமடைந்து பொதுமக்கள் செல்வதற்கு வழி இல்லாமல் மிகவும் சிரமமாக இருப்பதால் அதனை சீரமைத்து பேவர் பிளாக் சாலையாக அமைத்திட தயாரிக்கப்பட்ட திட்டமதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 698 | **<u>மன்றப்பொருள் எண்</u>**<u>.25</u><br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.173 நாள்08.12.2022இன்படி மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த **பேருந்து நிலையத்தினை** அப்புறப்படுத்தி புதிய **பேருந்து நிலையம்** கட்டும் பணி ரூ.660.00இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. நகர்மன்ற தீர்மான எண்.491 நாள்.24.06.2024 ல் அனுமதி அளித்துள்ளதன்படி, 19.08.2024ம் தேதிய அறிவிப்பில் வாயிலாக 04.09.2024 அன்று பொதுஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது இந்நிலையில் அரசு ஆணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.06.08.2024ன்படி நடவடிக்கைகளை மேறகொள்ளும்பொருட்டு மேற்படி 13.09.2024ம் தேதி ஏல நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டது. இரண்டாம் (15.10.2024) , மூன்றாம்(29.10.2024) மற்றும் **நான்காம்** (29.11.2024) அழைப்புகளில் மேற்படி அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி, பொதுஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு ஒத்தி வைக்கப்பட்ட**து.** இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.110/2024/அ2 நாள்.29.11.2024ன்படி, புதிய **பேருந்துநிலையத்தில்** உள்ள கடைகளுக்கு ஒப்படைக்கும்நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி 11.03.2025 ஆம் தேதி கோரப்பட்டது.<br>**பேருந்துநிலையத்தில்** உள்ள கடைகளுக்கு **பொதுஏலத்தில் வைப்புத்தொகை செலுத்தி எவரும் ஏலம் கோரவில்லை**, கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br><u>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்</u> | உயர்ந்தபட்ச மாதவாடகை கோரியுள்ள நபர்களுக்கு குத்தகை இனங்களை ஒப்படைக்கலாம். |

| கடை எண். | வ. எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை ரூ. | உயர்ந்தபட்ச மாதவாடகை ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 1 | திரு.சொ.அண்ணாமலை<br>த/பெ சொக்கலிங்கம்,<br>6/2, அபிராமி கற்பகம் காம்பளக்ஸ்,<br>வ.உ.சி. ரோடு, காரைக்குடி,<br>சிவகங்கை மாவட்டம். | 12000/– | 12000/– |
| | 2 | திரு.மை.நசுருதீன்,<br>த/பெ மைதீன்,<br>5/13, காந்திஜி பூங்கா ரோடு,<br>மேலூர். | 10500/– | ---- |
| 2 | 1 | திரு.அறிவுமணி,<br>த/பெ தியாகராஜன்,<br>37, சாலைமுதலியார் தெரு,<br>நரிமேடு,<br>மதுரை. | 11900/– | 11900/– |
| | 2 | திரு.அ.அப்பாஸ்,<br>த/பெ அப்துல் இப்ராஹிம்<br>20/13, மேலத்தெரு,<br>மேலூர் | 9500/– | ---- |
| 4 | 1 | திரு.சா.அசாருதீன்,<br>த/பெ சாகுல்ஹமீது,<br>5/32, சந்தைபேட்டை,<br>மேலூர் | 11875/– | 11875/– |
| | 2 | திருமதி.சா.மெகராஜ்பீபி<br>க/பெ சாகுல்ஹமீது,<br>5, ரஹ்மானியா பள்ளிவாசல்,<br>சந்தைபேட்டை 1வது தெரு,<br>மேலூர் | 10000/– | ---- |
| 6 (மாற்றுத் திறனாளி ஒதுக்கீடு) | 1 | திரு.கா.கபிப்ரகுமான்<br>த/பெ காசிம்,<br>272/140, அழகர்கோவில் ரோடு,<br>மேலூர். | 11100/– | 11100/– |
| | 2 | திரு.எம்.அப்துல்சக்கரை<br>த/பெ முகமது அப்துல் காதர், | 9600/– | ---- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4/72, முஸ்லீம் தெரு,<br>கீழவளவு<br>மேலூர். | | |
| 7 | 1 | திருமதி.இ.ரேகா, க/பெ இந்திரன் ,<br>6,228, பாப்பாக்குடிபட்டி,<br>இ.மலம்பட்டி,<br>மேலூர் | 7000/- | ---- |
| | 2 | திரு.ஆர்.பாலகிருஷ்ணன்,<br>த/பெ ராமசாமி,<br>6/153, பாப்பாகுடிபட்டி,<br>இ.மலம்பட்டி,<br>மேலூர். | 9100/- | 9100/- |
| 8 | 1 | திரு.பெரியசாமி,<br>த/பெ பாண்டி,<br>2/80, வடக்கு நாவினிப்பட்டி,<br>மேலூர் | 7100/- | ---- |
| | 2 | திரு.வீ.கலைவாணன்,<br>த/பெ வீரணன்,<br>20/10(3), புலிப்பட்டி மெயின்ரோடு,<br>வல்லாளப்பட்டி-625301 | 9250/- | 9250/- |
| 9 | 1 | திரு.ஆர்.குமரன்,<br>த/பெ ராமகிருஷ்ணன்,<br>32/10, நடுவளவு,<br>வல்லாளப்பட்டி, மேலூர் | 9150/- | 9150/- |
| | 2 | திரு.சி.கௌதமன்,<br>த/பெ சிவராமச்சந்திரன்,<br>7/37, அரியப்பன்பட்டி,<br>வல்லாளப்பட்டி,625301 | 7150/- | ---- |
| 12 | 1 | திரு.அ.அஜித்குமார்,<br>த/பெ அழகர்,<br>6/390, நாவினிப்பட்டி,<br>மேலூர் | 7800 | ---- |
| | 2 | திரு.கே.வேலாயுதம்,<br>த/பெ கஸ்தூரிநாதன்,<br>5/181, மெயின்ரோடு, நாவினிப்பட்டி,<br>மேலூர். | 9500 | 9500/- |
| 13 | 1 | திருமதி.ஆர்.திராவிடச்செல்வி,<br>க/பெ நாகராஜன்,<br>42/98, மேலப்பட்டி, | 9400 | 9400/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்னகரம்பட்டி<br>மேலூர் | | |
| | 2 | ஞா.தம்பித்துரை,<br>த/பெ.ஞானசூரியன்,<br>42, சென்னகரம்பட்டி,<br>மேலூர் 625105. | 7900 | ---- |
| 16 | 1 | திரு.த.விஜய், த/பெ தர்மபாண்டி,<br>3/9(1), நாகப்பன்பட்டி,<br>புதுசுக்காம்பட்டி,<br>மேலூர் | 7950 | ---- |
| | 2 | திரு.ரா.மணிகண்டன்,<br>த/பெ ராஜேந்திரன்,<br>13/32, ஏ, மூவேந்தர் நகர் 3வது தெரு,<br>மேலூர் | 9600 | **9600** |
| **18** | **1** | திரு.ஆர்.திராவிடச்செல்வி,<br>க/பெ ராஜராஜன்,<br>42/98, மேலப்பட்டி, சென்னகரம்பட்டி,<br>மேலூர். | 7050 | ---- |
| | **2** | திரு.ஞா.தம்பித்துரை,<br>த/பெ ஞானசூரியன்,<br>42, சென்னகரம்பட்டி, 625105<br>மேலூர். | 9300 | **9300/-** |
| **உணவகம்** | **1** | **திரு**.வீரணன் த/பெ சின்னனன்<br>**1/187,** அரசப்பன்பட்டி,<br>கொட்டகுடி,<br>மேலூர் | 40250/- | **40250/-** |
| | **2** | **திரு**.ஆர்.பிரபாகரன் த/பெ ரவி,<br>**16-12-13,**கிழக்கு சிலோன்காலனி,<br>மில்கேட், மேலூர் | **31000/-** | ---- |
| **பொருட்கள் பாதுகாப்பு அறை** | **1** | **திரு**.சி.கண்ணன் த/பெ சிவலிங்கம்,<br>**80,** சொக்கம்பட்டி,<br>மேலூர் | 7850/- | **7850/-** |
| | **2** | **திரு**.எம்.வெற்றிசண்முகம்,<br>த/பெ மோகன்,<br>**19,** காத்தாபிள்ளை தெரு,<br>மேலூர் | 7000/- | ---- |

மேற்காணும் கடைகளுக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலம் எண்.(3)

| | | |
|---|---|---|
| | கலந்துகொண்டவர்களில் கலம் எண்.5ல் உள்ள உயர்ந்தபட்ச மாதவாடகை கேள்வித்தொகை கோரிய நபருக்கு குத்தகை இனங்களின் பொதுஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுபாடுகளுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.110/2024/அ2) | |
| 699 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.26<br>இந்நகராட்சிக்கு சொந்தமான சாலைக்கரையான் ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமம் 01.04.2022 முதல் 31.03.2025 வரை மூன்றாண்டுகளுக்கு பொதுஏல நடவடிக்கைகள் மூலம் ஆண்டுக்குத்தகைவிடப்பட்டுள்ளது. உரிம காலம் 31.03.2025 உடன் முடிவடைகிறது. மேற்படி ஊரணிப்பகுதியை சுற்றியுள்ள பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு நீர்ஆதாரமாக உள்ளதால் சாலைக்கரையான் ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமத்தை ஆண்டுக்குத்தகை இனங்களின் பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 700 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.27<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட பல்வகை **கேட்பு** வசூல் செய்யும் உரிம இனங்களுக்கு **31.3.2025** உடன் உரிம காலம் முடிவடைவதால் அரசாணை ( நிலை ) எண்.**181** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் **19.9.2008**ன்படி **1.4.2025** முதல் **31.3.2028** முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு மேற்படி அரசாணை நிபந்தனைக**ள் மற்றும்** அரசாணை (2ப) எண்.66 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**06.08.2024 ன்படியும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்ட விதிகள் 2023 அடிப்படையிலும்**, பொது ஏலம் விடுவதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தயாரிக்கப்பட்ட பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | 1, 2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | இனம் | முன் வைப்பு தொகை | வங்கி உத்தரவாத (Bank Guarantee) சான்று | வங்கி உத்தரவாத சான்று அளிக்காவிடில் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை | உரிம காலம் |
|---|---|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுகட்டணம்வசூல் செய்யும் உரிமம்</td><td>100000</td><td>100000</td><td>100000</td><td>1.4.2025 முதல் 31.3.2028 வரை</td></tr>
</table>
அலுவலக குறிப்பு
1. அரசாணை ( நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 19.9.2008ல் தெரிவித்துள்ளபடி 1.4.2025 முதல் 31.3.2028 வரை மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்குவதற்கு பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுஏல அறிவிப்பு / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் பொது ஏல நிபந்தனைகள் அச்சிடவும் அதற்காகும் உத்தேச தொகை ரூ.50000/க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி உரிம இனங்கள் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர இருப்பதால் ஏலம் விடுவதை தடை கோரி எந்த வழக்கும் தொடராது இருக்க உயர்நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றங்களில் நகராட்சி சார்பில் கேவிட் மனு தாக்கல் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 351 /2025/அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>701</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்</u><u>.28</u>
இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரையிலான காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நிபந்தனைகளின்படி 31.05.2022 ஆம் தேதியில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு சே.எழில்வேந்தன் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை ரூ.40,20,000/-ஐ (ரூபாய் நாற்பது இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) பார்வை 2 காணும் நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு 01.06.2022 முதல் 31.03.2025 வரையிலான காலத்திற்கு ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் குத்தகைதாரக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலூர் நகராட்சி வாரச்சந்தையினை நகராட்சி பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடத்திட திரு சே.எழில்வேந்தன் குத்ததாரரால் ஒப்பந்தப்பத்திரம் கொடுத்துள்ளார். மேற்கண்ட உரிம காலத்திற்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையினை செலுத்தியுள்ளார்.
மேற்காணும் குத்தகை இனத்தின் உரிமகாலம் 31.03.2025 ஆம் தேதியுடன் முடிவுறும்
</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை உரிமத்தினை நீட்டிப்பு செய்ய கோரி குத்தகைதாரர் திரு.எஸ்.எழில்வேந்தன் அவர்களின் கடிதத்தினை மேலூர் நகராட்சி ஆணையாளர் பரிசீலினை செய்ய நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டதின்பேரில் நகராட்சி சட்டவிதிகள் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நிலையில் பார்வை 5–இல் காணும் விண்ணப்பத்தில் மேலூர் நகராட்சி புதிய தினசரி சந்தை கட்டுவதற்கான கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டதால் வாரச்சந்தை வளாகத்தில் ஒரு பகுதியில் தினசரி சந்தை செயல்பட்டதால் குத்தகைதாரர் திரு சே.எழில்வேந்தன் என்னால் சரியான வியாபாரம் செய்ய முடியாமல் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், நகராட்சியால் எற்பட்ட நஷ்டத்தினை ஈடு செய்ய வருகின்ற 2025–2028 வரை வாரச்சந்தை குத்தகை காலத்தினை நீட்டிப்பு செய்து தரும்படி கேட்டுகொண்டுள்ளார்.<br><br>மேற்காணும் விண்ணபத்தினை பரிசீலனை செய்ய கோரி மாண்பமை மிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேற்படி குத்தகைதாரர் தொடர்ந்த W.P (MD) எண்.2580/2025 வழக்கில் 29.01.2025 ஆம் தேதிய மாண்பமை மிகு உயர் மன்ற உத்திரவின் படி குத்தகைதாரரின் 10.01.2025 ஆம் தேதிய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.781/ஆர்–2/2025, நாள்.06.02.2025–ன் படி வாரச்சந்தை குத்தகை காலத்தினை நீட்டிப்பு செய்து தரகோரிய குத்தகைதாரரின் கோரிக்கை ஏற்க வழிவகை இல்லை என குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டதனை ஆட்சேபித்து வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை நீட்டிப்பு செய்ய கோரி திரு எஸ்.எழில்வேந்தன் குத்தகைதாரர் மாண்பமை மிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த W.P (MD) எண்.6734/2025 வழக்கில் 12.03.2025 ஆம் தேதியில் மாண்பமைமிகு உயர்நீதிமன்றம் கீழ்கண்டவாறு உத்திரவிட்டுள்ளது.<br><br>"In view of the above, the impugned order passed by the second respondent, dated 24.02.2025, is set aside and the matter be remanded back to the respondent Municipal Council for a fresh consideration of the petitioner's request for an extension of the license period. The respondent Municipal Council is directed to pass appropriate orders in accordance with law, within one month from the date of receipt of a copy of this order, after considering all the relevant facts, documents and legal provisions. In the interregnum, the respondents shall maintain status quo prevailing as on date"<br><br>மேற்காணும் மாண்பமை மிகு உயர்நீதிமன்ற உத்திரவின்படி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை நீட்டிப்பு செய்ய கோரியும், வருடத்திற்கு குத்தகைத் தொகையாக ரூ.5725000/– (ரூபாய் ஐம்பத்து ஏழு லட்சத்து இருபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) செலுத்துவதாக தெரிவித்தும் வரப்பெற்ற திரு எஸ்.எழில்வேந்தன் குத்தகைதாரரின் 14.03.2025 ஆம் தேதிய கோரிக்கை விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு–<br><br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br><br>ந.க.எண்.286/2025/அ2 | இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வாரச்சந்தை உரிமத்தினை நீட்டிக்க இயலாது என ஆணையாளரால் குத்தகைதாரருக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. ஆணையாளர் அவர்களின் உத்தரவினை எதிர்த்து குத்தகைதாரர் திரு.எஸ்.எழில்வேந்தன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில், சட்டவிதிகளுக்குட்பட்டு நகர்மன்றத்தின் முடிவு பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>மேலும் புதிய தினசரிசந்தை கட்டுமான பணிகள் நடைபெற்றதால் தற்காலிக தினசரி சந்தை 2½ ஆண்டுகள் வாரச்சந்தையில் தற்காலிகமாக செயல்பட்டதால் ஒரே இடத்தில் இரண்டு |

| | | |
|---|---|---|
| | | குத்தகைதாரர் கட்டணம் வசூல் செய்ய உரிமம் வழங்கப்பட்டுள்ளதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதால் குத்தகைதாரர் திரு.சே.எழில்வேந்தன் அவர்களின் 14.03.2025ஆம் தேதிய கடிதம் மன்றத்தால் பரிசீலிக்கப்பட்டதில் ஏற்கனவே வழங்கப்பட்ட குத்தகை தொகை ரூ.40,20,000/- கூடுதலாக 42 சதவீதத்திற்கு மேல் தொகையுடன் ரூ.5725000/- ஐ செலுத்த குத்தகைதாரர் சம்மதம் தெரிவித்துள்ளதால், இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை என கருதி மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்பிரிவின்படி, 2025-2026ம் வருடத்திற்கு குத்தகை தொகையாக ரூ.57,25,000/- மும் , ஒவ்வொரு வருடத்திற்கும் 5 சதவீதம் உயர்வு செய்து குத்தகை தொகை நிர்ணயம் |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செய்யவும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுகொள்ளப்பட்டு குத்தகைதாரர் திரு.சே.எழில்வேந்தன் என்பவருக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>702</td>
<td><u>மன்றப்பொருள் எண்</u><u>.29</u><br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் உணவுகளை தயாரித்து வழங்கி வரும் மதுரை ஸ்ரீமீனாட்சி கேட்டர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 21.05.2025 ல் முடிவடைவதால் ஓராண்டு காலத்திற்கு 22.05.2025 முதல் 21.05.2026 வரை ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்து மேற்படி நிறுவனத்திற்கு உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>703</td>
<td><u>மன்றப்பொருள் எண்</u><u>.30</u><br><br>மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2024–2025ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள 13.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr>
<th>வ. எண்.</th>
<th>வேலையின் விபரம்</th>
<th>மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்</th>
<th>மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th>
<th>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும்</th>
</tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td></td><td>சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td></td><td>பொது நிதி</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக கணினி,பிரிண்டர்ஸ்,லேப்டாப், நெட்வொர்க் அக்ஸஸ்சரீஸ் விநியோகம் செய்யும் பணி</td><td>8.00</td><td>M/S.சக்தி கம்பியூட்டர்ஸ் மேலூர்.<br>–0.03 % குறைவு</td><td>M/S.பி.சி.வேர்ல்டு மதுரை.<br>1.05 % அதிகம்</td></tr>
</table>
பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
அலுவலக குறிப்பு<br><br>
வரிசை எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட M/S.சக்தி கம்பியூட்டர்ஸ் மேலூர்ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>704</td>
<td><u>மன்றப்பொருள் எண்</u>.31<br><br>
தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெரும்பொருட்டு மேலூர் நகராட்சியை குப்பையில்லாத நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு பொதுமக்கள் ஆலோசனைகள், ஆட்சேபனைகள் தெரிவிக்க விளம்பரம் 30.11.2024 அன்று (Tamilaka News) மற்றும் (Trinity Mail Tamilagam) நாளிதழில் தமிழ் (ரூ.14,700/–) மற்றும் ஆங்கிலத்தில் (ரூ.18,270/–) விளம்பரம் செய்தமைக்கான மொத்தத் தொகை ரூ.32,970/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக் குறிப்பு :<br>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அ), ஆ) அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>705</td>
<td><u>மன்றப்பொருள் எண்</u>.32<br><br>
மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேலூர்
</td>
<td>அ), ஆ) அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிமுறைபடியும் அனைத்து கழிவுநீர் வாகனங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் விதிமுறைகளின்படியும் கழிவுநீர் வாகனங்களுக்கு கழிவுநீர் அகற்று வாரியத்தில் உரிமம் பெறப்பட்டு அதனை செயல்படுத்தும் வகையில் 14420 கட்டணமில்லா தொலைபேசி எண் கழிவுநீர் மேலாண்மை குழு அமைக்கப்பட்டு 100 சதவீதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் (open defecation free++) சிறுநீர் கழித்தல் இல்லாத நகராட்சியாக மாற்றுவது தொடர்பாக செய்திதாளில் விளம்பரம் செய்ததற்கான விளம்பரம் கட்டணம் தமிழக நியூஸ் தமிழ் = ரூ.14,700/- (Trinity Mail Tamilagam) ஆங்கிலம் = ரூ.15,525/- மொத்தம் ரூ.30,225/- யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 706 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.33<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9027/2023/எச்1 நாள்:13.08.2024 அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் மனிதக்கழிவுகளை மனிதனே அள்ளுதல் தடைச்சட்டம் 2013-ன் படி மனிதக் கழிவுகளை கையாளுவது தடை செய்யப்பட்டு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டு ஆட்சேபனை எதிர்நோக்கி (23.12.2024) அன்று தினத்தந்தி மற்றும் தினமணி நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.39,480/- தினத்தந்தி மற்றும் தினமணி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| 707 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.34<br><br>இந்நகராட்சி ஆணையரின், பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், குப்பை தரம் பிரித்து சேகரிக்கும் பணிக்காகவும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் 8 எண்ணிக்கையிலான இலகுரக வாகனம், 3 எண்ணிக்கையிலான கனரக வாகனம் மற்றும் 1 எண்ணிக்கையிலான கழிவுநீர் வாகனம் ஆகியவை பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வருகிறது. அவ்வப்போது இவ்வாகனங்கள் பழுது ஏற்படுவதால் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட பொது சுகாதாரப் பணிகள் தொய்வடைகிறது. இந்நகராட்சியின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டும், மக்களின் பொது சுகாதாரத்தினை காத்திடவும், அனைத்து வாகனங்களும், பழுது ஏற்படும் சமயம் பழுதுப்பணி மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள (Annual Maintenance) உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினத் தொகை **ரூ.5,00,000/- (<u>ஐந்து இலட்சம்</u>)** திற்கு மன்றத்தின் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கும், பார்வைக்கும்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 708 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.35<br><br>மேலூர் நகராட்சி – திடக்கழிவு மேலாண்மை திட்டம் – இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் சேகரமாகும் உலர் திடக் கழிவுகளை மலம்பட்டியில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது, மேலும் பயோமைனிங் பணிக்கு கூடுதலாக திட்டம் தயார் செய்து செயல்படுத்தப்படவுள்ளது, எனவே தினசரி இந்நகரில் சேகரமாகும் உலர் கழிவுகளை கொட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாமல் இருப்பதாலும், கொட்டி வைக்கப்பட்டுள்ள உலர் கழிவுகளை கையாளுவதற்கும், இதர பொது சுகாதாரப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளுக்காகத் தனியார் நிறுவனம் மூலம் JCB இயந்திரம் ஒப்பந்த அடிப்படையில் 01.04.2025 முதல் 31.03.2026 வரை உள்ள காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் (ஐந்து இலட்சம் மட்டும்) செலவினத்தில் பணியமர்த்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| 709 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.36<br><br>மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரம் – பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் இல்லங்கள் தோறும் **முதல் நிலை குப்பைகள் தரம்பிரித்து சேகரிக்கும் (Primary Collection) பணியில்** செயல்பட்டு வரும் 16 எண்ணிக்கையிலான டிரைசைக்கிள் வாகனங்கள் பழுதாகி இயக்க முடியாத சூழல் இருப்பதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்படுவதால் மேற்குறிப்பிட்டுள்ள 16 எண்ணிக்கையிலான டிரைசைக்கிள் வாகனங்களை முழுவதுமாக சீரமைத்தும், வாகனத்தின் பிளாட்பார்ம்களை முழுமையாக மாற்றி பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஆவண செய்ய வேண்டியும் இதற்கான உத்தேச செலவினம் **ரூ.2,80,000/- (இரண்டு இலட்சத்து எண்பதாயிரம்)** ஆகும் எனவும் இச்செலவினத்திற்கான நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>பழுது விபரம்:</u>**<br><br>1. ப்ரேம் ஒர்க்<br>2. டயர் மாற்றுதல்<br>3. ஆக்ஸில் ஒர்க்ஸ்<br>4. பேரிங் ஒர்க்ஸ்<br>5. போர்க் ஒர்க்ஸ்<br>6. பாக்ஸ் வெல்டிங்<br>7. பெயிண்டிங் ஒர்க்ஸ்<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்<br>2. மன்றம் அனுமதிக்கலாம் | |
| 710 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.37<br><br>மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரம் – பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் செயல்பட்டு வரும் 8 எண்ணிக்கையிலான இலகுரக குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வீடுகள் தோறும் குப்பைகளை தரம்பிரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன, தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத உலர்கழிவுகள் முறையே நுண் உரக்கூட மையம் மற்றும் வளமீட்பு மையங்களில் கழிவுகளைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. மேலும் நகராட்சி திடக்கழிவுகளை தரம்பிரித்து வழங்கும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள 8 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்களில் குப்பைகள் தரம்பிரித்தல் குறித்தான (Segregation Awareness) விழிப்புணர்வு பொதுமக்களிடமும், வீடுகள் தோறும் ஏற்படுத்திட ஒலிபெருக்கிக் கூம்பு, ஆம்பிளிபயர், பேட்டரியுடன் கூடிய அமைப்பினை மேற்குறிப்பிட்ட அனைத்து வாகனங்களிலும் ஏற்படுத்திட வேண்டியும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.70இலட்சம் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| 711 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.38<br><br>மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரம் – பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்திட, தேவையான தளவாடப் பொருட்கள் போதுமான | அனுமதிக்கப்பட்டது. |

இருப்பில் இல்லாத காரணத்தினால் இந்நகரின் தூய்மைப் பணியினைக் கருத்தில் கொண்டும், பொதுசுகாதாரம் காத்திடவும், பொதுசுகாதாரப் பணிவார்டு தேவையான தளவாடப்பொருட்கள், நகர்மன்ற அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1068/2021/எச்2, நாள்:10.11.2021–ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில், உரிய அரசு ஒப்பந்த விதிகளின்படி கொள்முதல் செய்து வழங்கிட ஆவண செய்யுமாறும் இதற்கான செலவினம் **ரூ.9,50,000/– (ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம்)** ஆகும் எனவும் இச்செலவினத்திற்கான நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **பொருட்களின் விபரம்** | **எண்ணிக்கை / அளவு** |
|---|---|---|
| 1. | சாக்கடைக் கரண்டி | 50 |
| 2. | 4 பல் கொக்கி | 30 |
| 3. | மண்வெட்டி | 20 |
| 4. | கடப்பாறை | 5 |
| 5. | வாங்கு அரிவாள் | 5 |
| 6. | குந்தாணி | 20 |
| 7. | கூட்டுமார் | 100 |
| 8. | தென்னைமார் | 200 |
| 9. | மண் தள்ளும் பிரஸ் | 50 |
| 10. | லெமன் கிராஸ் ஆயில் | 200 ltr |
| 11. | கருப்பு பினாயில் | 200 ltr |
| 12. | அரிவாள் | 20 |
| 13. | FRB 70 லி பிளாஸ்டிக் டிரம் | 150 |
| 14. | Litter Bin with Stand | 25 set |
| 15. | பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிக்கும் சாக்குப் பை | 500 |

**அலுவலகக்குறிப்பு**

1. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்
2. மன்றம் அனுமதிக்கலாம்

712

**<u>மன்றப்பொருள் எண்</u>**.39

மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரம் இந்நகராட்சிப் பகுதியில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6094/32/2018 நாள்:14.03.2018 மற்றும் KIDS 28369/J3 நாள்:22.11.2018ன் படியும் இந்நகராட்சி அலுவலக உத்தரவு

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொண்டு வரும் மதுரை ஜெய்சீரடி சான்

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.3123/2017/எச்1 நாள்:30.12.2023ன் படி 90 மனிதத்திறன்களை பயன்படுத்தி (Outsourcing) ஒப்பந்தம் மூலம் இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தம் 31.03.2025ல் முடிவடைகிறது.<br><br>மேலும் மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு நாள்:26.10.2023 W.P.(MD).No.25983/2023 மற்றும் W.P.(MD).No.22356/2023ன் படி இடைக்கால தடையை தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணிக்கு புதிய Tender வைத்து அந்த ஒப்பந்தபுள்ளியின் செயல்பாடு நடைமுறைக்கு வரும்வரை அல்லது 01.04.2025 முதல் 30.06.2025 வரை மூன்று மாத காலத்திற்கு அல்லது மேற்கண்ட வழக்கு முடியும் வரை திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் அத்தியாவசிய பணிகள் என்பதால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உரிய விதிமுறைகளின்படி 90 மனிதத்திறன்களை கொண்டு (Outsourcing) ஒப்பந்தம் மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம் | மேன்பவர் ஏஜென்சி மூலமாக பய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 01.04.2025 முதல் 30.06.2025 வரை 3 மாத காலத்திற்கு அனுமதிக்கப்பட்டது. |
| 713 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.<u>40</u><br><br>மேலூர் நகராட்சி – பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில், இல்லங்கள் தோறும் குப்பைகளை தரம் பிரித்து பெறப்படும் மின்கல வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள 20 எண்ணிக்கையிலான மின்கல வாகனங்கள் 2018–ம் வருடம் கொள்முதல் செய்யப்பட்டு கடந்த 7 வருடங்களாக பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில் வாகனத்தின் பாடி பிளாட்பார்ம் மிகவும் உருக்குலைந்து காணப்படுவதால், பயன்படுத்த முடியாத சூழல் நிலவி வருவதால், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்படுவதால், இந்நகராட்சியின் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முதற்கட்டமாக 10 எண்ணிக்கையிலான மின்கல வாகனங்களை பிளாட்பார்ம் மற்றும் பாடிபில்டிங் புதியதாக மாற்றி தரும்படி இக்குறிப்பு ஆணையருக்கு அனுப்பப்படுகிறது. மேலும் இதற்கான உத்தேச செலவினத்தொகை ஒரு வாகனத்திற்கு ரூ.50,000/– வீதம் 10 வாகனங்களுக்கு **ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)** ஆகும் எனவும் இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 714 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.<u>41</u><br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு2ல் பழைய பர்மா காலனி 2வது தெரு மற்றும் புதுபர்மா | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | காலனி தெருவில் போக்குவரத்திற்கு இடையூறாகவும் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் வகையில் தெருவின் மையப்பகுதியில் இரண்டு மின்கம்பங்களை நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி சாலையின் ஓரமாக மாற்றி அமைத்திட தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு கடிதம் அனுப்பவும் அந்த இரண்டு மின்கம்பங்களை அகற்றிட ஆகும் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 715 | **மன்றப்பொருள் எண்.**42<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 2 நொண்டிகோவில்பட்டி நொண்டிச்சாமி கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றில் பம்ப் மற்றும் குழாய்கள் சேதமடைந்துள்ளதால் அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட ஆழ்துளை கிணற்றை புதிதாக பம்ப் மற்றும் குழாய்கள் அமைத்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 716 | **மன்றப்பொருள் எண்.**43<br><br>இந்நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.2ல் பழைய பர்மா காலனி இரண்டாவது தெரு மற்றும் புதுபர்மா காலனி தெருவில் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையின்படி, சாலையின் மையப்பகுதியில் இருந்த மின்கம்பங்களை அகற்றியதால் சேதமடைந்த சாலைகளை சீரமைப்பு செய்ய ரூ.2.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கு மன்றத்தின்அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணியினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 717 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.44<br><br>இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்விநிதிகளுக்கு 2024–25ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு அறிக்கை மற்றும் 2025–26ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.<br><br>அலுவலக குறிப்பு<br><br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>ந.க.எண்.943/2022/பி1 | அனுமதிக்கப்பட்டது. |
| 718 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.45<br><br>**இந்நகர்மன்ற தீர்மான எண். 492 நாள்.24.06.2024 இல்** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தில் உள்ள இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்ட நிலையில் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிப்பட்டதில் எவரும் முன்வைப்புத்தொகை செலுததி ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்கள் மேற்படி இடத்தினை பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரகோரி மாண்புமிகு முதலமைச்சரின் மக்கள் குறைதீர்க்கும் முகாம்களில் கோரிக்கை மனு அளித்துள்ளனர். எனவே மேற்படி வாகன நிறுத்த இடத்தில் நிழற்குடை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்திடவும், புதிய பேருந்துநிலையத்தில் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஆண்டுக்குத்தகை இனங்களில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.110/2024/அ2 | அனுமதிக்கப்பட்டது. |
| 719 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.46 | புதிய பேருந்து நிலைய கடை எண்.3 யை திரு.ஆர்.பகிரதன் முந்தைய குத்தகைதாரருக்கு மாதவாடகை ரூ.12000/– க்கு ஒதுக்கீடு செய்ய முடிவு |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலைய கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொதுஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் பேருந்துநிலையத்தில் கடை எண்.1ஐ நடத்தி வந்த திரு.ஆர்.பகிரதன் குத்தகைதாரர் அரசாணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2024ல் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளினை பூர்த்தி செய்வதால் புதிய பேருந்து நிலையத்தில் கடை ஒதுக்கீடு செய்ய கோரியும் மாத வாடகை ரூ.12000/-(ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) செலுத்த சம்மதம் தெரிவித்து விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி அரசு ஆணையின்படி புதிய பேருந்து நிலைய கடை எண்.3ஐ மாத வாடகை ரூ.12000/- என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | செய்யப்பட்டது. |
| 720 | **<u>மன்றப்பொருள் எண்.47</u>**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலைய கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொதுஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அரசாணை எண்.66 நாள்.06.08.2024ன்படி மேற்படி பேருந்து நிலையத்தில் கடை எண்.4ஐ நடத்தி வந்த திரு.எஸ்.நாகராஜ் என்பவர் மாண்பமை மிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த எண்.W.P.(MD).No.27478/2024 வழக்கில் 15.11.2024ஆம் தேதிய தீர்ப்பாணையில் மேற்படி நபருக்கு கடை வழுங்குவது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் திரு.எஸ்.நாகராஜ், குத்தகைதாரர் மனுவின் புதிய பேருந்து நிலையத்தில் கடை ஒதுக்கீடு செய்ய கோரியும், கடை வாடகை ரூ.12000/- (ரூபாய் பனிரெண்டாயிரம் செலுத்த சம்மதம் தெரிவித்து விண்ணப்பம் அளித்துள்ளார்.<br><br>அரசாணை எண். 66 (2ப) நாள்.06.08.2024 ன்படியும், மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையின் உத்தரவின்படியும், புதிய பேருந்து நிலைய கடை எண்.5 ஐ திரு.எஸ்.நாகராஜன், குத்தகைதாரருக்கு மாத வாடகை ரூ.12000/க்கு கடை ஒதுக்கீடு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | புதிய பேருந்துநிலைய கடை எண்.5யை திரு.எஸ்.நாகராஜன் முந்தைய குத்தகைதாரருக்கு ரூ.12000/- க்கு மாதவாடகைக்கு ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.110/2024/அ2 | |
| 721 | <u>**மன்றப்பொருள் எண்**</u>.48<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு B, பிளாக் 21, நகரளவு எண்.13/5 மற்றும் 13/19 சர்வே எண்.410/1, 410/2, 410/,7, 410/8 மற்றும் 410/9) ல் 2392.45 ச.மீ இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./ம.உ.தி.கு (மதுரை மாவட்டம்) எண்.80/2024 எண்ணிடப்பட்டு மற்றும் கோப்பு எண்.35091/2024/SWP-0E49RY06/ ன்படியும், ம.வ/ம.உ.தி.கு.எண்.369/2024 திட்ட அனுமதி 407/2024 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.<br><br>மனுதாரர் திரு.எம்.முகமதுஹனிபா, அழகர்கோவில் ரோடு , மேலூர் என்பவர் உரிய ஆவணங்கள் இணைத்து இறுதிஒப்புதல் கோரி மனு செய்துள்ளார். நகர் ஊரமைப்புத்துறையின் திட்ட அனுமதியில் சிறப்பு நிபந்தனைகளின்படி, மேற்படி மனையிடத்தில் மனுதாரரால் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் எண்.3981/2024, நாள்.19.11.2024ல் உள்ளாட்சி உபயோக காலியிடத்தை 11.85ச.மீ உள்ளாட்சி (நகராட்சி) உபயோகத்திற்கு மேலூர் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு, ஆணையாளர் பெயரிலான அசல் பத்திரம் இணைத்து மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும் மழைநீர்வடிகால், மின்விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதிகளை மனுதாரரது பொறுப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2758/2024/எப்1 | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்னர் மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டது. |
| 722 | <u>**மன்றப்பொருள் எண்**</u>.49<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு C, பிளாக் 4, நகரளவு எண்.20/7, சர்வே எண்.20/7ல் 0.98 சென்ட் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./ம.உ.தி.கு (மதுரை மாவட்டம்) எண்.80/2024 எண்ணிடப்பட்டு மற்றும் கோப்பு எண்.33356/2024/SWP-09YM24CN/2024/TCP நாள்03.10.2024 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.<br><br>மனுதாரர் திருமதி.எஸ்.மலர்விழி க/பெ சிவக்குமார், திருவாதவூர் ரோடு, மேலூர் என்பவர் உரிய ஆவணங்கள் இணைத்து இறுதிஒப்புதல் கோரி மனு செய்துள்ளார். நகர் ஊரமைப்புத்துறையின் திட்ட அனுமதியில் சிறப்பு நிபந்தனைகளின்படி, மேற்படி மனையிடத்தில் மனுதாரரால் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் எண்.3352/2024, நாள்.25.09.2024ல் உள்ளாட்சி உபயோக காலியிடத்தை 14.73ச.மீ நகராட்சி உபயோகத்திற்கு மேலூர் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு, ஆணையாளர் பெயரிலான அசல் பத்திரம் இணைத்து மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும் மழைநீர்வடிகால், மின்விளக்கு வசதி மற்றும் குடிநீர் | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்னர் மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வசதிகளை மனுதாரரது பொறுப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2162/2024/எப்1 | |
| 723 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.50<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு A, பிளாக் 204/2, 204/8 புதிய வார்டு ஏ, பிளாக் 22, நகரளவு எண்.3/9, மற்றும் 3/23ல் உள்ள 1.69 ஏக்கர் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./ம.உ.தி.கு (மதுரை மாவட்டம்) எண்.294/2024 மற்றும் திட்ட அனுமதி எண்.327/2024 எண்ணிடப்பட்டு மற்றும் கோப்பு எண்.29677/ZG8UPPCE/SWP/2024/2024TCP நாள்.21.09.2024 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.<br><br>மனுதாரர் திரு.ஆர்.அஷ்டலெட்சுமி மற்றும் எம்.மோகன் 78, காந்திஜி பூங்கா ரோடு, வெள்ளநாதன்பட்டி, மேலூர் என்பவர் உரிய ஆவணங்கள் இணைத்து இறுதிஒப்புதல் கோரி மனு செய்துள்ளார். நகர் ஊரமைப்புத்துறையின் திட்ட அனுமதியில் சிறப்பு நிபந்தனைகளின்படி, மேற்படி மனையிடத்தில் மனுதாரரால் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் எண்.2889/2024, நாள்.02.08.2024ல் உள்ளாட்சி உபயோக காலியிடத்தை 25.43ச.மீ நகராட்சி உபயோகத்திற்கு மேலூர் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு, ஆணையாளர் பெயரிலான அசல் பத்திரம் இணைத்து மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும் மழைநீர்வடிகால், மின்விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதிகளை மனுதாரரது பொறுப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2759/2024/எப்1 | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்னர் மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டது. |
| 724 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.51<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு A, பிளாக் 6, நகரளவு எண்.151/1, சர்வே எண்.60/2B அழகர்கோவில் ரோட்டில் 68.79 சென்ட் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./ம.உ.தி.கு (மதுரை மாவட்டம்) எண்.87/2024 எண்ணிடப்பட்டு மற்றும் கோப்பு எண்.29511/2024/SWP-1/UL98PKS/2024/TCP நாள்27.08.2024 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. மனுதாரர் திரு.என்.ஜோதிலிங்கம், க.எண்.152, காந்தி நகர் 1வதுதெரு, மேலூர் என்பவர் உரிய ஆவணங்கள் இணைத்து இறுதிஒப்புதல் கோரி மனு செய்துள்ளார். நகர் ஊரமைப்புத்துறையின் திட்ட அனுமதியில் சிறப்பு நிபந்தனைகளின்படி, மேற்படி மனையிடத்தில் மனுதாரரால் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்னர் மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இனாம் சாசனம் ஆவணம் எண்.3364/2024, நாள்.26.09.2024ல் பொதுஉபயோக இடம் 18.86ச.மீ இடம் மற்றும் சாலைகளை மேலூர் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு, ஆணையாளர் பெயரிலான அசல் பத்திரம் இணைத்து மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும் மழைநீர்வடிகால், மின்விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதிகளை மனுதாரரது பொறுப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2408/2024/எப்1 | |
| 725 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.52<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு D, பிளாக் 8, நகரளவு எண்.11/22, 11/24 சர்வே எண்.24/2B1 கருத்தபுளியம்பட்டி என்ற இடத்தில் 24.16 சென்ட் இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ./ம.உ.தி.கு (மதுரை மாவட்டம்) எண்.220/2024 மற்றும் திட்ட அனுமதி எண்.244/2024 எண்ணிடப்பட்டு மற்றும் கோப்பு எண்.27515/2024/SWP/T51186NN/2024/TCP நாள்02.08.2024 மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.<br><br>மனுதாரர் திரு.எஸ்.முருகேசன் மற்றும் பி.கணேஷ்பாண்டியன், க.எண்.91/124G, அழகர்கோவில் ரோடு, மேலூர் என்பவர் உரிய ஆவணங்கள் இணைத்து இறுதிஒப்புதல் கோரி மனு செய்துள்ளார். நகர் ஊரமைப்புத்துறையின் திட்ட அனுமதியில் சிறப்பு நிபந்தனைகளின்படி, மேற்படி மனையிடத்தில் மனுதாரரால் சாலைகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் எண்.2421/2024, நாள்.20.06.2024ல் பொதுஉபயோக இடம் 10.30ச.மீ இடம் மற்றும் சாலைகளை சார்பதிவாளர் மேற்கு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டு, ஆணையாளர் பெயரிலான அசல் பத்திரம் இணைத்து மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும் மழைநீர்வடிகால், மின்விளக்கு வசதி மற்றும் குடிநீர் வசதிகளை மனுதாரரது பொறுப்பில் பணிகளை மேற்கொண்டுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.1853/2024/எப்1 | நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திய பின்னர் மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டது. |
| 726 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.53<br><br>மேலூர் நகராட்சி திருவாதவூர் ரோடு மேற்கு பக்கம் நகரளவு ஆவணங்களின்படி நகரளவு வார்டு டி, பிளாக் 21, நகரளவு எண்.104(பழைய புல எண்.148/2 CPT) ல் உள்ள | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பழைய இடத்தில் கழிப்பறை மற்றும் காலியிடம் உள்ளது.<br><br>மேற்படி இடத்தில் ஏற்கனவே உள்ள பழைய கழிப்பறையை இடித்து தற்போது புதிதாக கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது. வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி, மேற்படி இடத்தல் கழிப்பிடக் கட்டிடத்திற்கும் கிழக்கு பகுதிக்கும் திருவாதவூர் ரோடு இடைப்பட்ட காலியிடத்தில் 20'x10' அளவில் உள்ள காலி இடத்தில் கட்டிடம் கட்டினால் நகராட்சிக்கு வருவாய் ஈட்ட இயலும். எனவே மேற்கண்ட இடத்தில் 20'x10' அளவிலான கட்டிடம் அமைத்து தனியார் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வகையிலும், நகராட்சிக்கு வருவாயை ஈட்டுவதின் மூலம் நகராட்சியின் வருவாயை அதிகரிக்கலாம். எனவே மேற்கண்ட காலியிடத்தில் 200 சதுர அடி கட்டிடம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ.4.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்புமன்றம் அனுமதிக்கலாம். | |
| 727 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.54<br><br>மேலூர் நகராட்சியில் நகர்மன்றத்தலைவர் மற்றும் பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களை இயக்க போதுமான நிரந்தர ஓட்டுநர்கள் இல்லாததால் திட்டப்பணிகளில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளில் தொய்வு ஏற்படாமல் இருக்க பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதியும் மதுரை மாவட்ட ஆட்சியரகத்தின் விலை விகிதத்தில் ஓட்டுநர்களுக்கான தினக்கூலி அடிப்படையில் 01.04.2025 முதல் 31.12.2025 வரை மூன்று ஓட்டுநர்களை உரிய அரசு விதிமுறைகளின்படி இந்நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தாரர் மூலம் சப்ளை செய்யவும் அதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |